**திருவாரூர் நகராட்சி**
**2009-2010 ஆண்டு நிர்வாக அறிக்கை**
**01.04.2009 முதல் 31.03.2010 முடிய**

## அறிக்கை விபரம்

**ஆட்சி எல்லை:**

வரலாற்றுப்புகழ் மிக்கதும், சரித்திரப்புகழ் பெற்றதுமான மிகப்பழைமை வாய்ந்த பாடல் பெற்ற திருநகரான திருவாரூர் நகராட்சி 1914ம் ஆண்டு நிறுவப்பெற்றது. திருவாரூர் தமிழகத்தின நெற்களஞ்சியமான தஞ்சாவூர், நாகப்பட்டிணம் மாவட்டங்களின் நடுவில் நான்கு புறங்களிலும் புகைவண்டி மற்றும் பேருந்து தொடர்புடையதாக விவசாயமும், வியாபாரமும் ஒருங்கே வளர்ந்து வரும்நகரமாக அமைந்துள்ளது. இதன் எல்லைக்குள் வருவாய் கிராமங்கள் பின்வருமாறு உள்ளது. (1) விளமல், (2) விஜயபுரம், (3) திருவாரூர் (4) திருவாரூர் வடக்கு சேத்தி (5) கீழக்காவாலகுடி (6) ராமகே (7) பழவனங்குடி (8) சுந்தரவிளாகம் பகுதி (9) கிடாரங்கொண்டான் 19.10.91 முதல் ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு நாகப்பட்டிணத்தை தலைநகரமாக கொண்டு நாகப்பட்டிணம் மாவட்டமாக செயல்பட்டு வந்ததை பிரித்து 1.1.97 முதல் திருவாரூர் தலைநகரமாக கொண்ட திருவாரூர் மாவட்டம் உதயமாகி செயல்பட்டு வருகிறது(அரசு ஆணை எண். 1398/ வருவாய்த்துறை / 30.12.96)

| | |
|---|---|
| இந்நகராட்சி எல்லையின் மொத்தப்பரப்பு | : 10.47 ச.கி.மீ |
| 1971ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 35858 |
| 1981ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 43654 |
| 1991ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 49194 |
| 2001ம் ஆண்டின் குடியிருப்பு மக்கட்தொகை | : 56341 |

2001ம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கின்படி ஆண்கள் 28595 பெண்கள் 27746 ஆக மொத்தம் 56341

இந்நகராட்சியை 18.3.1978ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.414ன்படி முதல்நிலை நகராட்சியாக 1.4.1978 முதல் உயர்த்தபபட்டு மேற்படி தேதியிலிருந்து தொடர்ந்து முதல்நிலை நகராட்சியாக இயங்கி வருகிறது.

**மன்றம்:**

2006-ல் உள்ளாட்சி தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட நகர்மன்றம் 28.10.2006 முதல் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக்கொண்டு செயல்பட்டு வருகிறது.

அறிக்கை ஆண்டில் (2009-2010) மன்றத்தலைவராக திரு.கு.தென்னன், (15-வது வார்டு ) அவர்களும், துணைத்தலைவராக திரு.இரா.சங்கர்(20வ-து வார்டு ) அவர்களும், மன்ற உறுப்பினர்களாக கீழ்குறிப்பிட்டுள்ளவர்கள் தொடர்ந்து பணியாற்றி வந்தனர்.

| மன்ற உறுப்பினர்கள் பெயர் | வார்டு எண். |
|---|---|
| திருமதி. தெ. உமாமகேஸ்வரி, | 1 |
| திருமதி. மு.யோகாம்பாள், | 2 |
| திரு. வி.ஆர்.என்.பன்னீர்செல்வம் | 3 |
| திரு. த.செந்தில், | 4 |

| | |
|---|---|
| திருமதி. பா. மங்கலசெல்வி | 5 |
| திருமதி. அ. ரெத்தினம் | 6 |
| திரு. அ.முஹமது கஜ்ஜாலி | 7 |
| திரு. எஸ்.எம்.முஹமது யூசுப் | 8 |
| திரு. பொ. நடராஜன் | 9 |
| திரு. எஸ்.எம்.கார்த்திகேயன் | 10 |
| திருமதி. இ. கலைவாணி | 11 |
| திருமதி. த. சுதா | 12 |
| திரு. இரா. தெட்சிணாமூர்த்தி | 13 |
| திருமதி. பா. ஜெயமணி | 14 |
| திரு. எம். சம்பத் | 16 |
| திருமதி.ம.தேவி | 17 |
| திரு.நா. அசோகன் | 18 |
| திருமதி .சி. விஜயா | 19 |
| எஸ்.ராமசந்திரன் | 21 |
| திரு.க. சௌந்தரபாண்டியன் | 22 |
| திரு.கோ. மயில்வாகணன் | 23 |
| திருமதி.த. கல்யாணி | 24 |
| திரு.அ. ஹாஜாமைதீன் | 25 |
| திரு.எஸ்.குருசாமி | 26 |
| திரு.சு.தாஜீதீன் | 27 |
| திரு.ஜெ. அய்யனார் | 28 |
| திரு.வே. செந்தில் குமார் | 29 |
| திரு.கே. முருகையன் | 30 |

அறிக்கை ஆண்டில் குழு உறுப்பினர்களை கீழ்குறிப்பிட்டுள்ளவர்கள் பணியாற்றி வந்தனர்

1) நியமனக்குழு - 1) திரு.மா.சம்பத்
2) வரிமேல்முறையீட்டுகுழு - 1)திருமதி.பா.ஜெயமணி,திருமதி.ம.தேவி, திரு.கே.முருகையன் திரு.ஏ.ஹாஜாமைதீன்
3) ஒப்பந்தக்குழு - 1) திருமதி.எம்.யோகாம்பாள்

நகராட்சி மன்ற கூட்டங்கள் தலைவர் அவர்களால் முறையாக மாதந்தோறும் சாதாரண கூட்டம் கூட்டப்பட்டு நல்லமுறையில் நடைபெற்று வருகிறது. அறிக்கை ஆண்டில் அவசர கூட்டம் மற்றும் சிறப்பு கூட்டம் கூட்டப்படும் நிகழ்வு ஏற்பட்டது. ஒவ்வொரு கூட்டத்தின்போதும் வார்டு உறுப்பினர்கள் தங்கள் வார்டு சம்மந்தப்பட்டவைகளுக்கும் பொதுப்பிரச்சனைகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கி நிர்வாகம் நல்லமுறையில் நடைபெற முழு ஒத்துழைப்பை நல்கி வந்துள்ளார்கள். அறிக்கை ஆண்டில் உறுப்பினர்களுக்கு அமர்வு படியாக ரூ.330/- வழங்கப்பட்டுள்ளது.

**<u>கூட்டம்: 1.4.2009 முதல் 31.3.2010 முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை</u>**

| | 1.4.2009 முதல் 31.3.2010 முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணகூட்டம் | 7 | 195 |
| அவசர கூட்டம் | 9 | 85 |
| சிறப்பு கூட்டம் | 3 | 3 |
| மொத்தம் | 19 | 283 |

**<u>குழுக்கள்:</u>**

1920ம் ஆண்டு சென்னை மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 68, 70ன் கீழ் அமைக்கப்பெற்ற ஒப்பந்தக்குழு, நியமனக்குழு தவிர அறிக்கையாண்டில் வரி முறையீட்டுக்குழுவும் இருந்தது. அறிக்கையாண்டில் குழுக்கள் கீழ்க்கண்டவாறு பொருட்கள் முடிவு செய்தது.

| வ. எண் | குழுவின் பெயர் | 1.4.2009 முதல் 31.3.2010 முடிய நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | ஒப்பந்தக்குழு | 3 | 24 |
| 02 | நியமனக்குழு | 2 | 6 |
| 03 | வரிமேல்முறையீட்டுகுழு | - | - |

**<u>இடவசதி:</u>**

நகராட்சி அலுவலகம் அதன் சொந்தக்கட்டிடத்திலேயே இயங்கி வருகிறது. நவீன வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு திறப்பதற்குரிய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. மேலும் மற்றொரு அலுவலக கட்டிடம் கட்ட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அறிக்கையாண்டில் 1.4.2009 முதல் 31.3.2010 வரை பணிபுரிந்த அலுவலர்கள்

**<u>ஆணையாளர்:</u>**

1) திரு.அ.க.சிவகுமார் ஆணையர் 01.04.2008 முதல் 15.07.2009 முடிய
2) திரு.அப்துல் லத்தீப் ஆணையர் 16.07.2009 முதல் 10.11.2009 முடிய
3) திரு.கே.சரவணன் ஆணையர் 11.11.2009 முதல் 31.03.2010

**<u>மேலாளர்</u>**

1) திரு.எம்.கோவிந்தராஜன், மேலாளர், 01.04.2009 முதல் 31.03.2010 வரை

**3) கணக்கர்**

திரு.மு.ராஜி கணக்கர், 01.04.2009 முதல் 31.05.2009

திருமதி. லதா உதவியாளர் 01.06.2009 முதல் 21.12.2009

திருமதி.சீத்தா லெட்சுமி உதவியாளர் 22.12.2009 முதல் 31.03.2010

| வழக்குகள் விபரம் | 2007-2008-ல் நிலுவையில் இருந்தவழக்குகள் எண்ணிக்கை | 2008-2009-ல் தொடரப்பட்ட வழக்குகள் எண்ணிக்கை | அறிக்கையாண்டில் (2009-2010) நிலுவையில் உள்ள வழக்குகள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| சொத்துவரி | 1 | - | 1 |
| தொழில்வரி | 1 | - | 1 |
| வரியிலா இனம் | 5 | - | 5 |
| நகரமைப்பு பிரிவு | 6 | - | 6 |
| நிர்வாகம் தொடர்புடையவை | 5 | 5 | 10 |
| குறைந்தசெலவிலான கழிவறை கட்டும்திட்டம் | 1 | - | 1 |
| பொறியியல் பிரிவு | - | 2 | 2 |
| மொத்தம் | 19 | 7 | 26 |

திரு.டி.மணிவண்ணன் அவர்கள் நகராட்சியின் நிலை வழக்கறிஞராக அறிக்கை ஆண்டில் செயல்பட்டு வருகிறார்.

**அச்சடித்தல்::**

இந்த தலைப்பின் கீழ் செய்யப்பட்ட செலவின விபரம் வருமாறு:2009-2010 அறிக்கையாண்டில்

**பணியாளர்கள் ( பொதுப்பிரிவு ): :**

அறிக்கையாண்டில் 2009-2010 ஆணையரின் தலைமையின் கீழ் மேலாளர், மேற்பார்வையில் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது.

- மேலாளர் -1,
- கணக்கர் -1,
- உதவியாளர் -2,
- இளநிலை உதவியாளர்கள் - 10
- தட்டச்சர் -1,
- பதிவறை எழுத்தர் -2,
- அலுவலக உதவியாளர்கள் -4,
- இரவு காவலர் -1.

**வருவாய் பிரிவு:**

- அறிக்கையாண்டில் 2 வருவாய் ஆய்வர்களும் 9 வருவாய் உதவியாளர்களும், 1 அலுவலக உதவியாளரும் வருவாய் பிரிவில் பணியாற்றினர்.
- அறிக்கையாண்டில் திருமதி.ஆர்.லதா மற்றும் திருமதி.மா.சீத்தாலெட்சுமி ஆகியோரும்ட வருவாய் ஆய்வர்களாக பணிபுரிந்துள்ளனர். அவர்களுக்கு பிறகு திரு.தி.ஹரிகிருஷ்ணன், திரு.வி.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் வருவாய் ஆய்வர்களாக பணியாற்றி வந்துள்ளனர்.

**நகரமைப்பு பிரிவு :**

- இந்நகராட்சி 2 நகரமைப்பு ஆய்வாளர்களைக்கொண்டதாகும். (1.4.2009 முதல் 31.03.2010 முடிய )
- அறிக்கையாண்டில் அ.செல்வராஜ் மற்றும் நா.தமிழ்செல்வன் ஆகியோர் அறிக்கையாண்டு முடியும் வரையிலும் நகரமைப்பு ஆய்வர்களாக பணியாற்றியுள்ளார்.
- ஒரு இளநிலை உதவியாளரும், ஒரு அலுவலக உதவியாளரும் இப்பிரிவில் பணியாற்றி வந்துள்ளனர்.

**நகர் நலப்பிரிவு**

நகர் நலப்பிரிவு ஒரு துப்புரவு அலுவலர் தலைமையின் கீழ் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது அறிக்கையாண்டில் திரு.விஜயகுமார் துப்புரவு அலுவலர்(பொ) ஆக 1.4.2009 முதல் அறிக்கையாண்டு முடியும்வரை பணியாற்றி வந்துள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| 1) | துப்புரவு அலுவலர் | : | 1 |
| 2) | துப்புரவு ஆய்வர்கள் | : | 4 |
| 3) | துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் | : | 7 |
| 4) | மகப்பேறு உதவியாளர்கள் | : | 2 |
| 5) | மகப்பேறு ஆயாக்கள் | : | 4 |
| 6) | ஓட்டுநர்கள் | : | 9 |
| 7) | லாரி துலக்குநர் | : | 1 |
| 8) | களப்பணியாளர் | : | 1 |
| 9) | துப்புரவு பணியாளர்கள் | : | |

**பொறியியல் பிரிவு:**

இந்நகராட்சி பொறியியல் பிரிவானது பொறியாளரின் தலைமையில் கீழ்க்கண்ட பணியாளர்களைக்கொண்டதாக இருந்தது. அறிக்கையாண்டில் பொறியாளராக திரு.ஆ.மதிவாணன் அவர்கள் பணியாற்றி உள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகராட்சி பொறியாளர் | : | 1 |
| 2) | பொதுப்பணி பார்வையாளர் | : | 1 |
| 3) | பணி ஆய்வர் | : | 1 |
| 4) | மின்னாளர் | : | 2 |
| 5) | மீட்டர்ரீடர் | : | 1 |
| 6) | ஒயர்மேன் | : | 3 |
| 7) | பைப் லைன் பிட்டர் | : | 2 |
| 8) | பவுண்டன் கிளீனர் | : | 2 |
| 9) | பூங்கா காவலர் | : | 1 |
| 10) | தலைமை நீரேற்று நிலைய கிளீனர் | : | 3 |
| 11) | தலைமை நீரேற்று நிலைய காவலர் | : | 4 |
| 12) | அவன்யூ கூலி | : | 1 |
| 13) | கேங்கூலி | : | 7 |
| 14) | மின்கம்பி உதவியாளர் | : | 3 |

**மருத்துவமனை :**

நகராட்சியால் கொடிக்கால்பாளையத்தில் ஒரு மருத்துவமனை நடத்தப்பட்டு வருகிறது. அதில் கீழ்க்கண்ட பணியாளர்களை கொண்டதாக உள்ளது. அறிக்கையாண்டில் டாக்டர் ஆர்.தேவராஜன் மருத்துவ அலுவலராக பணியாற்றி வந்துள்ளார்.

| | | | |
|---|---|---|---|
| 1) | மருத்துவ அலுவலர் | : | 1 |
| 2) | பெண் செவிலிய உதவியாளர் | : | 1(திருமதி.எஸ்.என்.பாலா |
| | பெண் செவிலிய உதயியாளர் ஓய்வுபெற்றதால் 1.7.2006 முதல் காலியாக உள்ளது) | | |
| 3) | மருந்தாளுனர் | : | 1 |
| 4) | துப்புரவு பணியாளர் | : | 1 |
| 5) | இரவு காவலர் | : | 1 |

**நிர்வாகசெலவினம்:**

அறிக்கையாண்டில் புதிய கணக்கு முறை தொடர்ந்து அமுலில் இருந்துவருகிறது கீழ்கண்டவாறு நிர்வாகச்செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

| | | | | வரவு | செலவு |
|---|---|---|---|---|---|
| 1) | பொது நிதி | : | ரூ. | 728 | 839 |
| 2) | குடிநீர் நிதி | : | ரூ. | 91 | 104 |
| 3) | கல்விநிதி | : | ரூ. | 41 | 9 |

**போக்குவரத்து :**

நகரத்திலிருந்து வெளியூர்களுக்கு செல்லும் பேருந்துகள் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தாலும் தனியாராலும் நடத்தப்பட்டு வருகிறது. இந்நகரத்திலிருந்து நகரப்பேருந்துகள் அரசு மற்றும் தனியார் துறையில் கீழ்கண்ட வழித்தடங்களில் இயக்கப்படுகிறது.

கொரடாச்சேரி, திருத்துறைப்பூண்டி, நாகப்பட்டிணம், நாகலுார், நன்னிலம், குடவாசல், எட்டுக்குடி, தண்ணீர்குன்னம், எரவாஞ்சேரி, மோகனுார், அம்மையப்பன், திருநெல்லிக்காவல் , திருமருகல், திருவிடைச்சேரி, வாழ்க்கை, கழனிவாசல், மன்னார்குடி, வடபாதிமங்கலம், நீடாமங்கலம், நாகூர், சாட்டியகுடி, தேவூர், பேரளம், திருமதிகுன்னம், மோகனுார், முசிறியம், மாவட்டக்குடி, செருவாமணி, ஆலத்தம்பாடி.

**வரியில்லா இனம்:**

இந்நகராட்சியில் பலன் தரத்தக்க இனங்களின் கீழ் ஓராண்டு குத்தகை இனங்களான பேருந்துநிலைய பேருந்துகளுக்கான கட்டண வசூல், சைக்கிள் பாதுகாப்பு இடம் கட்டண வசூல் நவீன கழிப்பறை கட்டண வசூல், வாரச்சந்தை கட்டண வசூல், போன்ற இனங்களிலிருந்து 2009-2010 அறிக்கை ஆண்டில் கீழ்க்கண்ட விபரப்படிக்கு வருமானம் வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| 01 | நகராட்சி வாரச்சந்தையில் கட்டணம் வசூல், செய்து கொள்ளும் உரிமம் | 127000 |
| 02 | புதிய பேருந்துநிலையத்தில் வந்துபோகும் பேருந்துகளுக்கும் தினசரி கட்டணம் பகல் இரவு இரண்டு வேளையும் வசூல், செய்து கொள்ளும் உரிமம் | 533500 |
| 03 | பழைய பேருந்துநிலையத்தின் உட்புறம் உள்ள காலியிடத்தில் லாரிகள் சுற்றுலா பேருந்துகள் வாடகை கார்கள் கைவண்டிகள்ஆகியவை நிறுத்துவதற்கான கட்டணம் வசூல், செய்துகொள்ளும்உரிமம் | 162001 |
| 04 | நகராட்சி ஆடுவதை சாலையில்கட்டணம் தண்டும் உரிமம் | 27500 |
| 05 | நகராட்சி புதிய பேருந்துநிலைய சைக்கிள் பாதுகாப்பகத்தில் வைக்கப்படும சைக்கிள் மோட்டார் சைக்கிள்களுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 426199 |
| 06 | நகராட்சி பேருந்துநிலையத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 291100 |
| 07 | நகராட்சி நாளங்காடியில் உள்ள நவீன கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 48500 |
| 08 | கமலாலயம் கீழ்கரை நகராட்சி கட்டண கழிப்பிடத்தை உபயோகிக்கும் நபர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 38750 |
| 09 | கோவில்துறையான் சந்தில் மீன்விற்கும் கடை களில் கட்டணம் தண்டும் உரிமம் | 46500 |
| 10 | நகராட்சி தங்கும் விடுதியில் கட்டணம் வசூலிக்கும்உரிமம்(2009-2010) | 188888 |
| 11 | புதிய பேருந்துநிலையத்தில் டி.வி.மூலம் விளம்பரம் செய்தல் | - |
| 12 | பனகல்சாலை வேன் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூல் செய்தல் | - |
| 13 | பனகல்சாலை வேன் நிறுத்துமிடம் அருகில் உள்ள ஆட்டோ நிறுத்தத்தில் கட்டணம் வசூல் செய்தல் | 15100 |
| 14 | தாழை.மு.கருணாநிதி வணிக வளாக சைக்கிள் பாதுகாப்பகம் | 202000 |
| 15 | மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டண கழிப்பிடம் | 18500 |
| 16 | மனித எடைபார்க்கும் இயந்திரம்ட மூலம் வசூல் | 10500 |

மேற்கண்ட குத்தகை இனங்கள் நீங்கலாகபுதிய பேருந்துநிலையத்தில் அமைந்துள்ள கடைகள், பழைய பேருந்துநிலையத்தில் உள்ள கடைகள், ஜூப்ளிமார்க்கெட் கடைகள் வள்ளுவர் மார்க்கெட் கடைகள் நாளங்காடி கடைகள் வாரசந்தை முன்புறமுள்ள ஐ.யு.டி.பி. திட்டக்கடைகள் பனகல் சாலையில் உள்ள தாழை.மு.கருணாநிதி வணிக வளாக கடைகள் இவற்றின் மூலம் நகராட்சிக்கு அறிக்கையாண்டில் ரூ. 8042450/- கேட்பாக உள்ளது.

**சிறுசேமிப்பு:**

திருவாரூர் மாவட்ட ஆட்சியரால் இந்நகராட்சிக்கு சிறுசேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 150 லட்சம் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டு அறிக்கையாண்டில் ரூ.98.11 லட்சம் சிறுசேமிப்பு தொகை வசூல் செய்யப்பட்டது சாதனை 65.40 சதவீதம்.

**சுவர்ண ஜெயந்தி சகாரி ரோஜ்கார் யோஜனா திட்டம் :**

நகரத்தில் வசிக்கக்கூடிய வேலை வாய்ப்பற்ற ஏழைகள் அல்லது தங்கள் தகுதிக்கும் குறைந்த வேலை வாய்ப்புள்ள ஏழைகளின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்த ஏதுவாக அவர்களுக்கு சுய வேலை வாய்ப்பு பணிகள் அல்லது கூலி வேலை வாய்ப்பு வழங்குவதின் வாயிலாக அவர்களை ஊக்குவிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் இம்மக்களுக்கு அடிப்படை வசதிகள் செய்துதரும் திட்டத்தின் முறையில் பொருத்தமான சமூக அமைப்புகளை உருவாக்கி அம்மக்களுக்குத் தேவையான நலத்திட்டங்களை உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் இப்படிப்பட்ட சமூக அமைப்புகள் வாயிலாக வழங்குவதை இத்திட்டத்தின் நோக்கமாகும்

இத்திட்டத்திற்கு மைய அரசு 75 சதவீதமும் மாநில அரசு 25 சதவிகிதமும் நிதியுதவி செய்யும் என்ற அடிப்படையில் இத்திட்டம் செயலாக்கப்படுகிறது.

இத்திட்டம் ஒரு சமுதாய அமைப்பாளர் ஒருவரை கொண்டு அவரின் மேற்பார்வையில் குடிசை பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட இருப்பிட சமுதாய தொண்டர்கள் மற்றும் கன்வீனர்களை கொண்டு அமுல்படுத்தப்படுகிறது.

இத்திட்டம் கீழே குறிப்பிட்டுள்ள உப திட்டங்களைக்கொண்டு நடைபெற்று வருகிறது.

- கூலி வேலை வாய்ப்பு திட்டம்
- சுய வேலை வாய்ப்பு திட்டம்
- அடிப்படை வசதி
- மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு திட்டம்
- பயிற்சி
- சிக்கனம் மற்றும் நாணய சங்கம்.

**சுய வேலை வாய்ப்புத்திட்டம்**

- தனி நபரின் பொருளாதார தேவையை உயர்த்த 15 சதவிகித மான்ய கடன் வங்கி மூலம் வழங்கப்பட்டு வருகிறது
- ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ. 1315216

  \-------------

  ரூ. 1315216

  \-------------
- பயனடைந்த பயனாளிகள் 556

**மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாடு திட்டம்**

- இத்திட்டத்தில் 2009-10ம் ஆண்டில் 22 மகளிர் சுய உதவி குழுக்கள் அமைக்கப்பட்டு செயல்பட்டுவருகிறது. இதில் நிதி ஒதுக்கீடு ரூ.176474/- வரப்பெற்று 4 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு 35 சதவிகிதம் மான்யத்துடன் கூடிய கடன் பாரத மாநில வங்கி மூலம் வழங்கப்பட்டு பொருளாதார மேம்பாடு அடைந்துள்ளனர்.
- 2009-2010-ம் ஆண்டின் நிதி ஒதுக்கீடு ரூ. 176474/-

- **<u>சமூக அமைப்பு</u>**
- 2009-10-ம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரு.118162/-
  மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ஊக்குநர் பிரதிநிதி பயிற்சி வழங்குதல் மற்றும் உறுப்பினர்கள் பயிற்சி வழங்குதல்

**<u>சிக்கனம் மற்றும் நாணய சங்கம்</u>**

- இதுவரை 22 மகளிர் சுயஉதவிக்குழுக்கள் அமைக்கப்பட்டது.
- 3 குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டது.
- குழுக்களுக்கு நேரடி கடன் வழங்கப்பட்டது.
- 2009-10-ம் ஆண்டின் நிதிஒதுக்கீடு ரு. 59081/-
- குழுக்களுக்கு சுழல்நிதி வழங்கப்பட்டது.
- இதுவரை 54 பெண்கள் பயனடைந்து உள்ளனர்.

**<u>பள்ளிக்கட்டிடங்கள் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளிகள்</u>**

- திருவாரூர் நகராட்சியில் நான்கு ஆரம்ப பள்ளிகளும் , இரண்டு நடுநிலைப்பள்ளிகளும், ஒரு உயர்நிலைப்பள்ளியும் 1989 வரை நகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்தது. 1.1.90 முதல் இப்பள்ளிகள் மாவட்ட தொடக்க கல்வி அலுவலர் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகிறது.

இந்நகராட்சி பராமரிப்பில் மேல்நிலைபள்ளிகள் ஏதும் இல்லை நகர எல்லைக்குள் ஆண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும், பெண்களுக்கு ஒரு மேல்நிலைப்பள்ளியும் இருபாலருக்கும் ஒரு உயர்நிலைப்பள்ளியும் தனியாரால் பராமரிக்கப்பட்டு வருகிறது. கொடிக்கால்பாளையத்தில் அரசினர் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் இயங்கிவருகிறது.

- ஐந்து ஆரம்ப பள்ளி கட்டிடங்களும் இரண்டு நடுநிலைப்பள்ளி மற்றும் ஒரு உயர்நிலைப்பள்ளி கட்டிடமும் நகராட்சி பராமரிப்பில் இருந்துவருகிறது.

**<u>கல்லூரி :</u>**

கிடாரங்கொண்டான் (திருவாரூர் நாகை சாலை) யில் இரு பாலருக்கும் அரசினர் கலைக்கல்லூரி ஒன்றும் வாசன் நகர் பகுதியில் ராபியத்தம்மாள் அகமது மைதீன் பெண்கள் தனியார் கல்லூரி ஒன்றும் செயல்பட்டு வருகிறது.

**<u>பொது நூல் நிலையங்கள்:</u>**

மடப்புரம் கல்யாணசுந்தர முதலியார் நகராட்சி இலவச நூல் நிலையமும் படிப்பகமும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நகராட்சி விஜயபுரம் பகுதியில் மாவட்டநூலக குழுவினரின் கிளை நூலகம் ஒன்றும் இயங்கி வருகிறது.

**<u>நோயாளிகள் :</u>**

அறிக்கையாண்டில் 2009-2010 நகராட்சி மருத்துவமனையில்
சிகிச்சை பெற்றனர்

சராசரியாக 52194 பேர் நகராட்சி மருத்துவமனையில் சிகிச்சை பெறுகிறார்கள்.

**<u>இடவசதி :</u>**

கொடிக்கால்பாளையம் நகராட்சி மருத்துவமனை நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கிவருகிறது. அறிக்கையாண்டில் மருந்துகள் ஊதியங்கள் மற்றும் இதர செலவுகளுக்காக ரு. 995000/- செலவிடப்பட்டுள்ளது.

## பொறியியல் பிரிவு

### பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம்

- குடிநீர் ஆதாரம் 1. அம்மையப்பன் 2. கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம்
- அம்மையப்பன் குடிநீர் திட்டம் துவக்கப்பட்ட ஆண்டு 6.10.1973
- கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டம் துவக்கப்பட்ட ஆண்டு 30.11.2004
- அம்மையப்பன் குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு 19.50லட்சம் லிட்டர்கள்
- கொள்ளிடம் வேதாரண்யம் கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு 12.50 லட்சம் லிட்டர்கள்
- மினி பவர் பம்பு மற்றும் மார்க் 2 பம்புகளின் மூலமாக தினசரி பெறப்படும் குடிநீரின் அளவு 12.00 லட்சம் லிட்டர்கள்
- நகரின் தேவைக்கு தினசரி பயன்படுத்தப்படும் குடிநீரின் கூடுதல் அளவு 44.00லட்சம் லிட்டர்கள்
- நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு தினசரி வழங்கப்படும் குடிநீரின் அளவு 72 லிட்டர்கள்
- பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தின் மூலம் பயன் அடையும் மக்கள் தொகை 61144
- நகரின் உள்ள பகிர்மான குழாய்களின் நீளம் 72.000கி.மீட்டர்
- நீரேற்று குழாயின் நீளம் 50.000கி.மீட்டர்
- தினசரி குடிநீர் வழங்கப்படும் நேரம் காலை 6.00 முதல் 8.00 மணி முடிய மாலை 3.00 முதல் 4.00 மணி முடிய
- பொது குடிநீர் குழாய்களின் எண்ணிக்கை 145
- வீட்டு இணைப்புகளின் எண்ணிக்கை 3090
- ஆழ்குழாய்களின் மொத்த எண்ணிக்கை 140
- மினி பவர் பம்புகளின் எண்ணிக்கை 60
- மேல்நிலை தொட்டிகளின் எண்ணிக்கை 5
- மேல்நிலை தொட்டிகளின் அமைவிடம் தென்றல் நகர் (2லட்சம் லிட்டர் கொள்ளளவு ) கிடாரங்கொண்டான் (60000 லிட்டர் கொள்ளளவு ) ஐ.பி.கோயில் தெரு (30000 லிட்டர் கொள்ளளவு ) மடப்புரம் (11.36 லட்சம் லிட்டர் கொள்ளளவு ) மற்றும் சந்தை பேட்டை (15 லட்சம் லிட்டர் கொள்ளளவு )
- அறிக்கை ஆண்டில் மாநில நிதிக்குழு, ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் ரூ9.90லட்சம் செலவினத்தில் 8 எண்ணிக்கை மினிபவர் பம்புகளும் 120மீட்டர் நீளத்திற்கு குடிநீர் பகிர்மான குழாய்களும் அமைக்கப்பட்டது.
- அறிக்கை ஆண்டில் பகுதி 2 திட்டத்தின் கீழ் அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையத்தில் தடையில்லா மின்சாரம் பெறும்பொருட்டு ரூ6.18லட்சம் செலவினத்தில் ஜெனரேட்டர் சாதனம் பொருத்தப்பட்டுள்ளது.

### பாதாள சாக்கடை திட்டம்

- பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்திட அரசாணை எண்.16 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 01.09.2006ன் படி நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.
- தலைமை பொறியாளர் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தஞ்சாவூர் அவர்களின் 26.09.2006ம் தேதிய சி.இ/இஆர்/தஞ்சாவூர்/12/2006-07 எண்ணிட்ட உத்தரவின் படி தொழில் நுட்ப அங்கீகாரம் அளிக்கப்பட்டது.
- திட்ட மதிப்பீடு ரூ39.26கோடி

- நிதி ஆதாரம்
  - அ) 25 சதவீத அரசு மானியம் ரூ 10.00கோடி
  - ஆ) 16 சதவீத நகராட்சி பங்களிப்பு ரூ 6.38கோடி
  - இ) 14 சதவீத கடன் ரூ5.38கோடி
  - ஈ) 45 சதவீத அரசு கூடுதல் மானியம் ரூ 17.50கோடி
- இத்திட்டத்தின் கீழ் கழிவு நீரேற்று நிலையங்கள் ராமகே, அரசன் குளம், திருமஞ்சன வீதி, செட்டிகுளம் மற்றும் சீனிவாசபுரம் ஆகிய 5 இடங்களில் அமைய உள்ளது.
- அறிக்கை ஆண்டின் அரசன் குளம் சீனிவாசபுரம் ,ராமகே மற்றும் செட்டிக்குளம் ஆகிய இடங்களில் 4 இடங்களில் கழிவு நீரேற்று நிலையம் கட்டுமான பணிகள் முடிவுறும் தருவாயில் உள்ளது.
- கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ராமகே என்ற இடத்தில் 9.47 ஏக்கர் நிலத்தில் அமைத்திட கிரையம் செய்யப்பட்ட இடம் குடிநீர் வடிகால் வாரியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
- ஆள்இறங்கும் குழிகள் 2850எண்ணிக்கை அமைக்கப்படவேண்டும். அறிக்கை ஆண்டில் 2293 எண்ணிக்கை அமைக்கப்பட்டது.
- வீட்டு இணைப்புகள் 14539 எண்ணிக்கை அமைக்கப்படவேண்டும்.அறிக்கை ஆண்டில் 8126 எண்ணிக்கை அமைக்கப்பட்டது.
- கழிவு நீர்குழாய் 71680மீட்டர் அமைக்கப்படவேண்டும். அறிக்கை ஆண்டில் 59306 மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்பட்டது.
- கழிவுநீர் உந்து நிலையங்கள் 16 எண்ணிக்கை அமைக்கப்படவேண்டும். அறிக்கை ஆண்டில் 8 எண்ணிக்கை அமைக்கப்பட்டது.
- இத்திட்டம் 2010–11ம் நிதியாண்டில் நிறைவுபெறும்.

**சாலைகள்**

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்டவாறு சாலைகள் பயன்பாட்டில் இருந்தன.
  - அ) தார் சாலைகள் 62.395 கி.மீட்டர்
  - ஆ) சிமெண்ட் சாலைகள் 10.215 கி.மீட்டர்
  - இ) கருங்கல் ஜல்லி சாகைள் 8.210 கி.மீட்டர்
  - கூடுதல் 80.820கி.மீட்டர்
- அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விபரபடி தார்சாலைகள் மேம்படுத்தப்பட்டது.

| நிதி தலைப்பு | சாலையின் நீளம் மீட்டர் | செலவினம் ரூ |
|---|---|---|
| வெள்ளநிவாரண நிதி | 2150 | 2300000 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 950 | 350000 |
| பொதுநிதி | 2150 | 1945000 |
| 12வது நிதிகுழு திட்டம் | 1200 | 1310000 |
| பகுதி 2 திட்டம் | 220 | 329000 |
| **கூடுதல்** | **6670** | **6234000** |

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விபரபடி சிமெண்ட்சாலைகள் அமைக்கப்பட்டது.

| நிதி தலைப்பு | சாலையின் நீளம் மீட்டர் | செலவினம் ரூ |
|---|---|---|
| ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை மேம்பாடு திட்டம் | 418 | 1395000 |
| சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி | 85 | 150000 |
| பொதுநிதி | 170 | 560000 |
| பகுதி 2 திட்டம் | 388 | 1295000 |

| | | |
|---|---|---|
| **கூடுதல்** | **1061** | **3400000** |

**வடிகால்**

- அறிக்கை ஆண்டில் 26.123கி.மீட்டர் நீளமுள்ள கழிவு நீர் வடிகால் நகராட்சியால் பராமரிக்கப்பட்டது. மேலும் 8.57லட்சம் செலவினத்தில் 325 மீட்டர் நீளத்திற்கு கழிவு நீர் வடிகால்மற்றும் சிறுபாலம் ஒன்றும் அமைக்கப்பட்டது .

**தெருவிளக்குகள்**

- அறிக்கை ஆண்டில் கீழ்கண்ட விபரப்படி தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டது.

| | |
|---|---|
| அ) குழல்விளக்குகள் | 2386எண்ணிக்கை |
| ஆ) சோடியம் ஆவி விளக்குகள் | 936 எண்ணிக்கை |
| இ) உயர்மின் கோபுர விளக்குகள் | 5 எண்ணிக்கை |
| கூடுதல் | 3281 எண்ணிக்கை |

- அறிக்கை ஆண்டில் 122 எண்ணிக்கை புதியதெருவிளக்குகள் அமைப்பதற்கு மின்பாதை வசதிஏற்படுத்திட ரூ4.65லட்சம் மின்வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது.

**கட்டிடங்கள்**

- நகராட்சி அலுவலகத்திற்கு ரூ30.00லட்சம் மதிப்பீட்டில் மாநில நிதிக்குழு இடைவெளி நிரப்பு நிதியிலிருந்து புதிய அலுவலக கட்டிடம் கட்டுமான பணி தொடங்கப்பட்டுள்ளது.
- 2006–07ம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் எரிவாயு தகனமேடை ஒன்று நெய்விளக்கு தோப்பு மயானத்தில் ரூ47.00லட்சம் மதிப்பீட்டில் கட்டுமானம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது.
- ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாடு திட்டத்தின் கீழ் மேலசீதனகட்டளை குடிசை பகுதியில் ரூ10.00லட்சம் மதிப்பீட்டில் சமுதாய கூடம் ஒன்று கட்டுமான செய்திட வேலை உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

**பூங்காக்கள்**

- அறிக்கை ஆண்டில் நகராட்சியால் 6 பூங்காக்கள் பராமரிக்கப்பட்டது. அவையாவன சோமசுந்தரம் பூங்கா, தென்றல் நகர் பூங்கா, ஐ.பி.கோயில் சாலையோர பூங்கா, மடப்புரம் பாட்டை சாலையோர பூங்கா, மானந்தியார் தெரு சாலையோர பூங்கா மற்றும் கொடிக்கால் பாளையம் சாலையோர பூங்கா
- அறிக்கை ஆண்டில் திருவள்ளுவர் நகர் பூங்கா ரூ8.95லட்சம் செலவினத்தில் சுற்றுசுவர் அமைத்தல், விளையாட்டுசாதனங்கள்நிறுவுதல் மற்றும் வண்ணபூச்செடிகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

**கழிப்பிடங்கள்**

- அறிக்கை ஆண்டில் சுகாதார வளாகங்கள் 3 எண்ணிக்கை, வாம்பே கழிப்பிடங்கள் 10 எண்ணிக்கை மற்றும் பொது கழிப்பிடங்கள் 22 எண்ணிக்கை பராமரிக்கப்பட்டன.
- அறிக்கை ஆண்டில் ஒருங்கிணைந்த குடியிருப்பு மற்றும் குடிசை பகுதி மேம்பாடு திட்டதின் கீழ் ரூ2.17லட்சம் செலவினத்தில் திலகர் 2வது தெருவில் பொது கழிப்பிடம் ஒன்று கட்டப்பட்டது.
- மேற்படி இதே திட்டதின் கீழ் கொத்ததெரு, கட்டளைதோப்பு, சீனிவாசபுரம் மற்றும் கிடாரங்கொண்டான் பகுதிகளில் பொது கழிப்பிடங்கள் கட்டுமான செய்வதற்கு வேலை உத்தரவு அளிக்கப்பட்டுள்ளது.

**பொதுசுகாதாரப்பிரிவு :**

நகரின் சுற்றுப்புற சூழலை துாய்மைப்படுத்தவும் மக்களின் நலன் கருதி பொதுசுகாதாரப்பிரிவில் மேற்கொள்ளப்பட்டு நடவடிக்கைகள் விபரம் பின்வருமாறு:

**வாகனங்கள்:**

நகரில் குப்பைகளை அகற்ற கீழ்கண்ட வாகனங்கள் பயன்படுத்தப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1) பெரியலாரி | - | 1 |
| 2) மினிலாரி | - | 6 |
| 3) கழிவு நீர் லாரி | - | 1 |
| 4) ஆட்டோ | - | |
| 5) பவர் டில்லர் | - | |
| 6) டிராக்டர்,டிரைலர் | - | 1 |
| 7) சைக்கிள் ரிக்ஷா | - | 37 |

மேற்குறிப்பிட்டுள்ளவற்றில் 2 மினிலாரி, ஆட்டோ மற்றும் 1 பவர் டில்லர் தற்பொழுது பயன்பாட்டில் இல்லை.

மேற்படி வாகனங்கள் மூலம் தினசரி சுமார் 18.5 மெ.டன் குப்பைகள் நகரிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறது. அவ்வாறு அப்புறப்படுத்தப்படும்குப்பைகளை இந்நகராட்சி நெய்விளக்கு தோப்பில் 6.14 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் சேர்க்கப்படுகிறது.

**பிறப்பு , இறப்பு , நோய் தடுப்பு வசதிகள்:**

அறிக்கையாண்டில் பதிவான பிறப்புகள் ( 2009-2010) 4861

**தடுப்பூசி மற்றும் சொட்டு மருந்து:வழங்கப்பட்ட விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | டி.பி.டி | 1113 |
| 2 | போலியோ | 1113 |
| 3 | பி.சி.ஜி. | 1113 |
| 4 | டி.டி. | 1113 |
| 5 | தட்டம்மை | 1113 |
| 6 | இருதய நோய் தடுப்பு | 371 |
| 7 | மஞ்சக் காமாளை-பி | 1113 |

இந்நகரபகுதியில் பிறந்த குழந்தைகளுக்கு தடுப்பூசி திட்டம் மற்றும் சொட்டுமருந்து திட்டத்தின்கீழ் மேற்கண்டவாறு நிதியாண்டில் இலக்கீடு நிர்ணயித்து சாதனை எட்டப்பட்டது.

**இறப்பும் தொற்றுநோய்களும்:**

| | |
|---|---|
| அறிக்கையாண்டில் பதிவான இறப்புகள் ( 2009-2010) | 656 |
| இறந்து பிறந்தவை (2009-10) | 67 |
| சென்ற ஆண்டு இநற்து பிறந்தவை (2008-2009) | 79 |

அறிக்கையாண்டில் காலரா நோய் போன்ற தொற்றுநோய்களால் யாரும் மரணம் அடையவில்லை.

தொற்றுநோய் பரவாமல் தடுக்க எல்லா சுகாதார ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. 2.11.58ம் தேதிய 3522 எச் எண்ணுள்ள அரசாணையின் அனுமதிக்கப்பட்ட யானைக்கால் வியாதி தடுப்பு திட்டம் செயல்பட்டது. மேற்படி திட்டமானது பிரத்தியேக துப்புரவு ஆய்வாளர் களப்பணி உதவியாளர், மேற்பார்வையிலும் மருந்து அடிப்பவர்களாலும் இயங்கி வருகிறது.

**இறப்பு காரண பட்டியல்:**

| நோய் | இறந்தவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| சுவாச நோய் | 128 |
| எலும்புருக்கி நோய் | 09 |
| இருதய கோளாறு | 297 |
| நாய்க்கடி | இல்லை |
| தீப்பிடித்து இறந்தவர்கள் | 20 |
| பாம்புகடியால் இறந்தவர்கள் | இல்லை |
| புற்றுநோய் | 10 |
| மற்ற வியாதிகள் | 191 |

656_

**<u>கலவை உரத்தயாரிப்பு:</u>**

மனித கழிவு அகற்றும்முறை 1.10.98 முதல் நிறுத்தப்பட்டதால் அறிக்கையாண்டில் கலவை உரத்தயாரிப்பு ஏதும் இல்லை.

**<u>உணவு கலப்பட தடுப்பு சட்டம்:</u>**

அறிக்கை ஆண்டில் உணவு கலப்பட தடுப்பு சட்டத்தின் கீழ் 27 உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டுள்ளது. அச்ச அருவருக்கத்தக்க தொழில் இனங்களுக்கும் வியாபாரிகளுக்கும்வழக்கம்போல் நிபந்தனைகள் விதிக்கப்பெற்று உரிமையாணைகள் வழங்கப்பெற்றது.

2009-2010 ல் 5 உணவு கலப்பட வழக்குகள் தொடரப்பட்டுள்ளது

**<u>விழாக்களும் உற்சவங்களும்:</u>**

இந்நகரில் கோவில் கொண்டுள்ள அருள்மிகு தியாகேச சுவாமி திருக்கோவில் ஆழித்தேர் திருவிழா 16.06.2010-ல் தெப்ப திருவிழா முதல் மூன்று நாட்கள் நடைபெற்றது இத்திருவிழாவிற்கு நகராட்சியால் பொதுமக்களுக்கும், யாத்ரிகர்களுக்கும் கூடுதல் சுகாதார வசதிகள் செய்து தரப்பட்டது. குரு தெட்சிணாமூர்த்தி சுவாமிகள் வழிபாடு விழாவும் அறிக்கையாண்டில் நடைபெற்றது. இந்நகராட்சியில் பயணிகள் வரி எதுவும்விதிக்கப்படவில்லை.

**<u>தேசிய மகப்பேறு உதவித்திட்டம்:</u>**

தேசிய மகப்பேறு உதவித்திட்டம் சமூக நலம் மற்றும் ஊட்டச்சத்து துறையிலிருந்து பொதுசுகாதாரத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு நகராட்சி பகுதிகளில் நகராட்சி ஆணையரால்1.4.2001 முதல் செயல்படுத்தி அரசாணை எண். 311/சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை நாள்: 21.11.2001ல் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேற்படி மகப்பேறு உதவித்திட்டத்தின் கீழ் ஆண்டு வருமானம் 12,000 கீழ் உள்ள 19 வயதுக்கு மேற்பட்ட கர்ப்பிணி தாய்மார்களுக்கு உயிருடன் பிறக்கும் முதல் இரண்டு கர்ப்பங்களுக்கு மாவட்டஆட்சியரிடமிருந்து நிதி ஒதுக்கீடு பெற்று துணை இயக்குநர் சுகாதார பணிகள் மூலம்ஒரு கர்ப்பிணி தாய்மாருக்கு ரூ.600 வழங்கும் திட்டத்தின்படி 2009-2010-ம் அறிக்கையாண்டில்

விண்ணப்பங்கள் பெறப்பட்டு அனைவருக்கும் ரூ.600/- வீதம் வழங்கப்பட்டுள்ளது.

**<u>டாக்டர் முத்துலெட்சுமி மகப்பேறு உதவி திட்டம்</u>**

இந்நகராட்சியில் அரசாணை எண். 184 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை நாள். 11.9.2006ன்படி செயல்முறைப்படுத்தப்பட்டுவருகிறது. இதன்மூலம் கர்ப்பிணி தாய்மார்களுகக் குழந்தை பிறப்பதற்கு மூன்று மாதங்களிலும் குழந்தை பிறந்த பிறகு மூன்று மாதங்களுக்கும் ஆக மொத்தம் ஆறு மாதங்களுக்கு இரண்டு சம தவணைத்தொகை ரூ.3000 வீதம் ரூ.6000/- வீதம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின்கீழ் 31.3.2010 முடிய வரப்பெற்ற விண்ணப்பங்கள் 790 வரப்பெற்ற அனைத்து பயனாளிகளும் 2370000/- நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

**<u>வைட்டமின் ஏ திரவம் சொட்டுமருந்து வழங்கும் திட்டம்</u>**

6 மாதம் முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளுக்கு கண்பார்வை இழப்பு கண்பார்வை குறைவு, கண்ணில் பூவிழுதல் கண்எரிச்சல், மற்றும் மாலைக்கண் நோய் மற்றும் எதிர்காலத்தில் கண்ணாடி அணிவதை தடுத்திட ஆண்டிற்கு இருமுறை வைட்டமின் ஏ திரவம் வழங்கப்படுகிறது.

நடப்பு ஆண்டில் முகாம் அமைத்து வீடுவீடாக சென்று சொட்டுமருந்து வழங்கப்பட்டது.

| தேதி | இலக்கு | சாதனை |
|---|---|---|
| மார்ச்-2010 | 6950 | 6776 |

**இளம்பிள்ளை வாத நோய் தடுப்பு திட்டம்**

இளம்பிள்ளை வாத நோயினை அறவே ஒழிக்கும் பொருட்டு ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தேசிய இளம்பிள்ளை வாத நோய் ஒழிப்பு திட்டத்தின் அடிப்படையில் இரண்டு தவணையாக 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு போலியோ சொட்டுமருந்து வழங்க இலக்கு நிர்ணயம் செய்து வழங்கப்பட்டது.

| முகாம் நடைபெற்ற தேதி | இலக்கு | சாதனை |
|---|---|---|
| 10.01.2010 | 7836 | 7836 |
| 07.02.2010 | 7836 | 7836 |

**மருத்துவ கழிவுகள்**

மருத்துவமனைகள் கிளினிக் நடத்துபவர்கள் மற்றும் நோய்கிருமி பரிசோதனை கூடங்கள் நடத்துபவர்கள் தங்களது மருத்துவமனை கழிவுகளை சொந்த பொறுப்பில் அகற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறில்லாமல் மற்ற கழிவுகளுடன் கலந்து தெருவில் எரிவதோ அல்லது நகராட்சி குப்பைதொட்டிகள் குப்பை வண்டிகளில் சேர்க்ககூடாது என அறிவிப்பு வழங்கப்பட்டு மருத்துவ கழிவினை நகராட்சி குப்பையில் சேர்த்திடாமல் 15.3.2002 முதல் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**திடக்கழிவு மேலாண்மை விதிகள் - 2000**

திடக்கழிவு மேலாண்மை விதிகளின் 2000ன்படி மக்கும் குப்பை, மக்காகுப்பை என இரு வகையாக தனித்தனியே பிரித்தும், இருவகை கழிவுகளை அறிவியல் முறைப்படி அழித்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி வீட்டிற்கு வீடு சென்று மக்கும் குப்பை, மக்காகுப்பை என சேகரிக்கும் முறை வார்டுகளில் செயல்படுத்தப்பட்டுள்ளது.

திடக்கழிவு மேலாண்மை விதிகள் சிறப்பாக செயலாக்கம் செய்திட துணை விதிகள் ஏற்படுத்தப்பட்டு மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

**மலேரியா, பைலேரியா / யானைக்கால் நோய் தடுப்பு திட்டம்:**

யானைக்கால் நோயினை தடுக்க டிஇசி/அல்பண்டசோல் மாத்திரை ஒட்டு மொத்த சிகிச்சைத்திட்டத்தின்படி இரண்டு வயதிற்கு உட்பட்டவர்கள் மற்றும் கர்ப்பிணி தாய்மார் நீங்கலாக 28.02.2010ல் வீடுவீடாக நடப்பு ஆண்டில் மாத்திரை வழங்கப்பட்டது.

**சீருடைகளும் காலணிகளும் வழங்கும் திட்டம்:**

அறிக்கையாண்டில் நகராட்சியில் பணிபுரியும் 128 துப்புரவு பணியாளர்களுக்கும் சீருடை பெற தகுதியுடைய மற்ற பணியாளர்களுக்கும் தலா 2 செட் வீதம் வழங்கப்பட்டது.

**பொது:**

இந்நகராட்சியில் பணியாற்றும் எல்லா துப்புரவு தொழிலாளர்களுக்கும் அவர்களின் வாழ்க்கை தரத்திற்கேற்றவாறு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன. நகராட்சி மூலமாக 35 வீடுகள் துப்புரவு தொழிலாளர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தன்னிறைவு திட்டத்தின் கீழ் 6 வீடுகள் கட்டி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மற்றவர்களுக்கு வீட்டுவாடகை படியாக ரூ.80/- வீதம் கொடுக்கப்பட்டு வருகிறது.

**நகரமைப்புத்திட்டங்கள் 01.04.2009 முதல் 31.03.2010 முடிய**

இந்நகராட்சியில் அனுமதிக்கப்பட்ட நகரமைப்புத்திட்டங்கள் 4 உள்ளது. மேலும் இரண்டு நகரமைப்பு திட்டங்கள்( எண். 5 மற்றும் 6) அரசினரின் அனுமதி பெற வேண்டி நடவடிக்கைகளில் இருந்து வருகின்றது. தவிர 20.12.77ம் தேதிய ஊர் வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அரசாணை எண்.239-ன்படி அபிவிருத்தி கட்டணம் வசூலிக்க தற்போதுள்ள நகரமைப்புத்திட்டங்கள் நீங்கலாக நகரின் பிற பகுதிகளை 9 பிரிவு அபிவிருத்தி திட்டங்களாக பிரித்து நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் ஒப்புதலுக்கும் அரசினரின் ஒப்புதலுக்கும் அனுப்பப்பட்டு நடவடிக்கைகளில்உள்ளது.

**ஆக்கிரமிப்புகள்**:

தற்காலிக வரைகடப்பு இனங்களுக்கு ஆக்கிரமிப்பு நோட்டீஸ் கொடுக்கப்பட்டு மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்காலிக வரைகடப்பு தலைப்பின் கீழ் 2009-2010 ( 01.04.2009முதல்31.03.2010 ) அறிக்கையாண்டில் வருமானம் ரூ. 154250/-

**கட்டிட மனுக்கள்:**

| | | |
|---|---|---|
| அறிக்கையாண்டில் வரப்பெற்ற மனுக்கள் | : | 246 |
| அனுமதி வழங்கப்பட்டது | : | 242 |

அனுமதி மறுக்கப்பட்டது : 4

**அனுமதி இல்லாமல் பெறும் கட்டுமானம்**

அனுமதியற்ற கட்டுமானங்கள் : 4

அதில் அனுமதி பெற்றவை : 2

**மனைப்பிரிவுகள்**

வரப்பெற்ற மனைப்பிரிவு விண்ணப்பங்கள் 2

நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களுக்கு 2

ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது :

ஒப்புதல் பெறப்பட்டது : 2

ஒப்புதல் நிலுவை : -

**அனுமதியில்லா மனைப்பிரிவுகள் வரன்முறை செய்யப்பட்ட விபரம்**

நீண்டநெடுங்காலமாக அனுமதியில்லாதமனப்பிரிவுகளை வரன்முறை செய்யும் பொருட்டு ஏற்கனவே பிறப்பிக்கப்பட்ட அரசாணைகளில் நடைமுறை எளிமையாக இல்லாததாலும் அபிவிருத்தி கட்டணம் திறவிடக்கட்டணம் மற்றும் வரன்முறைக்கட்டணம் ஆகியவைகளை தவிர்த்து ஒரே தலைப்பின் கீழ் மனைப்பிரிவு வரன்முறை கட்டணமாக ஒரு சதுரடிக்கு ரூ.2.00 என தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ள அரசாணையில் அதிக அளவில் மனைகள் வரன்முறை செய்ய வழிவகை செய்துள்ளது. 59/ந.நி.ம.கு.வ.துறை /நாள்: 26.7.06, அரசாணை நிலை எண். 244/ந.நி.ம.கு.வ.துறை/நாள்: 5.12.2008.

| வரப்பெற்ற மனுக்களின் எண்ணிக்கை | வரன்முறை செய்யப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை | நகராட்சிக்கு வரப்பெற்ற தொகை |
|---|---|---|
| 238 | 231 | ரூ. 11,47,085/- |

**வரி: மற்றும் வரியிலா இனம்**

அறிக்கை ஆண்டில் 2009-2010-வரி மற்றும் வரியிலா இனங்களின் மூலம் நகராட்சியின் கேட்பு, வசூல், நிலுவை பின்வருமாறு இருந்தது.

வரி மற்றும் வரியிலா இனங்கள்

| | கேட்பு | | | வசூல் | | | நிலுவை | | | சதவிகிதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் | நிலுவை | நடப்பு | மொத்தம் |
| சொத்துவரி | 93.16 | 204.42 | 297.59 | 25.34 | 157.04 | 182.39 | 67.81 | 47.38 | 115.19 | 27.21 | 76.82 | 61.29 |
| தொழில்வரி | 21.03 | 26.02 | 47.05 | 3.71 | 22.10 | 25.81 | 17.32 | 3.91 | 21.24 | 17.64 | 84.96 | 54.86 |
| குடிநீர் கட்டணம் | 6.55 | 18.64 | 25.20 | 1.23 | 16.90 | 18.14 | 5.32 | 1.74 | 7.06 | 18.85 | 90.64 | 71.96 |
| வரியிலா இனம் | 7.05 | 78.66 | 85.71 | 5.17 | 57.93 | 63.11 | 1.87 | 20.72 | 22.59 | 73.43 | 73.66 | 73.64 |

அறிக்கையாண்டில் நிலுவையில் இருந்த பெரும்பாலான இனங்களில் வசூல் நடவடிக்கை தீவிரப்படுத்தப்பட்டு வசூல் பணி மேற்கொள்ளப்பட்டது.

**கடன்கள்**

ஒருங்கிணைந்த அரசு கடன் மற்றும் சிறப்பு சாலை வசதி ஆகியவற்றிற்கு இந்நகராட்சியில் பெறப்பட்ட மொத்த கடன் ரூ.1280870 + 6330000 தொகை 7610820க்கு அசல்மற்றும் வட்டித்தொகையை மாநில நிதித்தொகையில் ஈடு செய்யப்பட்டு வருகிறது. கூட்டு குடிநீர் திட்டத்திற்கு பெறப்பட்ட கடன் தொகை ரூ.22866000/- நகராட்சியில் பொதுமக்களிடமிருந்து வசூல்செய்யப்படும் குடிநீர்நிதியிலிருந்து செலுத்தப்பட்டு வருகிறது. இது தவிர சிறப்பு சாலை மேம்பாட்டு திட்டத்தின்கீழ் டுபிட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ.60.00 லட்சம் கடனாக பெறப்பட்டுள்ளது.

**வரவுகளும், செலவுகளும்:**

| வ.எண்.நிதி | வரவு | செலவு |
|---|---|---|
| | கோடி | கோடி |
| சேமநலநிதி | லட்சம் | லட்சம் |

**தணிக்கை தடைகள்**

இந்நகராட்சியில் தணிக்கை 2006-07 வரை தணிக்கை முடிவடைந்து அறிக்கை பெறப்பட்டுள்ளது. அறிக்கை ஆண்டில் 946 தணிக்கைத்தடைகள் நிலுவையில் உள்ளது. மேற்கண்ட தணிக்கைபத்திகளை நீக்கம் செய்வதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. ஆண்டு வாரியாக தணிக்கைத்தடைகள் விபரம் வருமாறு:

திருவாரூர் நகராட்சி

ஆண்டு வாரியாக நிலுவை உள்ள தணிக்கை பத்திகளின் எண்ணிக்கை

| வருடம் | மொத்த நிலுவை பத்திகளின் எண்ணிக்கை | நீக்கம் செய் விபரம் |
|---|---|---|
| 1980–81 | 1 | ஏப்ரல்–2009ல் தணிக்கை கூட்டமர்வு கூட்டம் நடைபெற்றது. அதில் 38 தணிக்கை தடைகளும் , ஜுன் 2009 ல் 85 தணிக்கை தடைகள் நீக்கம் செய்யப்பட்டது. |
| 1981–82 | 7 | |
| 1984–85 | 8 | |
| 1985–86 | 29 | |
| 1986–87 | 16 | |
| 1987–88 | 6 | |
| 1988–89 | 10 | |
| 1989–90 | 9 | |
| 1990–91 | 13 | |
| 1991–92 | 52 | |
| 1992–93 | 15 | |
| 1993–94 | 55 | |
| 1994–95 | 66 | |
| 1995–96 | 40 | |
| 1996–97 | 43 | |
| 1997–98 | 28 | |
| 1998–99 | 15 | |
| 1999–2000 | 26 | |
| 2000–01 | 47 | |
| 2001–02 | 66 | |
| 2002–03 | 72 | |
| 2003–04 | 46 | |
| 2004–05 | 42 | |
| 2005–06 | 116 | |
| 2006–07 | 118 | |
| கூடுதல் | 946 | |

**புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர்.சத்துணவு திட்டம் :**

5 நகராட்சி துவக்கப்பள்ளிகளிலும் இரண்டு நடுநிலைப்பள்ளிகளிலும் சத்துணவு மையங்கள் பராமரிக்கப்பட்டு 5 வயது முதல் 9 வயது வரைஉள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டு வருகிறது.

நகராட்சி நடுநிலைப்பள்ளி 6 முதல் 8 வகுப்புமுடிய 10+14 முடிய வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு அளிக்கப்பட்டுவருகிறது. நாள் ஒன்றுக்கு 690 மாணவ, மாணவியர்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளரும் ஒரு உதவியாளரும் ஒரு சமையலரும் பணிபுரிந்து வருகிறார்கள். இத்திட்டத்திற்கென ஒருஉதவியாளர் மற்றும் கணக்கர் பணிபுரிகிறார்.

5+9 வயது வரையுள்ள 5 மையங்களில் 5 அமைப்பாளர்களும், 4 சமையலர்களும், 3 உதவியாளர்களும் பணிபுரிந்துவருகின்றனர்.

10+14 வயது பிரிவு வரை உள்ள மையத்தில் 2 அமைப்பாளர் 2 சமையலர் மற்றும் 2 உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்கள்.

**<u>சத்துணவு திட்டம் (பொது )</u>**

இத்திட்டத்தில் 5+9 வரையுள்ள மாணவ, மாணவி ஒருவருக்கு கீழ்கண்ட விகிதப்படி சத்துணவு பொருட்கள் அளிக்கப்பட்டு வருகிறது. ஒரு பயனாளிக்கு 34 1/2 பைசா வீதம் உணவூட்டு செலவினத்திற்கு செலவிடப்படுகிறது. மேலும் உணவு உண்ணும் பயனாளிகளுக்கு வாரந்தோறும் இரண்டு முட்டைகள் கொ.கடலை ப.பயிறு வழங்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பிரிவின் கீழ் அறிக்கையாண்டில் 1.4.2009 முதல் 30.9.2009 முடிய ரூ. 2,82,744/- முன்மான்யம் பெறப்பட்டுள்ளது. இன்னும் இரண்டு காலாண்டுகளுக்கு மான்யம் வரப்படவில்லை. பொதுநிதியிலிருந்து நிதிமாற்றம் செய்து செலவிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளி மையத்திற்கும் ஒரு சத்துணவு அமைப்பாளருக்கு ரூ. 3290 அடிப்படை ஊதியமும் ஒருசமையலருக்கு ரூ.1600 ஒரு உதவியாளருக்கு ரூ.1150 வழங்கப்பட்டு வருகிறது.

**<u>மக்கள் சாசனம்:</u>**

தமிழக அரசு தனது பணியில் வெளிப்படையானதாகவும் பொறுப்பானதாகவும் இருப்பது அவசியம் என்ற அடிப்படையில் மக்கள் சாசனம் ஒன்றினை வழங்க முடிவு செய்துள்ளது. மக்களுக்கு தெளிவான அடிப்படைக்கொள்கைக்கொண்டு மக்கள் சாசனம் வழங்குவதற்காக ஆணை ஒன்றினையும் அரசு பிறப்பித்துள்ளது. அதன் அடிப்படையில் திருவாரூர் நகர்மன்ற திருவாரூர் நகரமக்களுக்கு மக்கள் சாசனம் ஒன்றினை தயாரித்து மன்றத்தின் 447 எண்ணிட்ட 28.10.98ம் நாளிட்ட தீர்மானத்தில் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்பட்டது. இதனையடுத்து புதிய ஈடுபாட்டுடன் செம்மையான மற்றும் சிறப்பான குடிமை சேவைகளுக்கு அளிக்கவும் மன்றதீர்மான எண்.2562 நாள்: 29.10.2004ல் மன்ற ஒப்புதல் பெற்று இரண்டாவது பதிப்பு மக்கள் சாசனம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது

**<u>சாசனத்தின் குறிக்கோள்:</u>**

1) சேவைகளை விரைவாகவும் தரமுடனும் அளித்தல்
2) சேவைகளை வழங்குவதற்கான கால அளவுகளைத் தெளிவாக அறிவித்தல்
3) நுகர்வோரின் நம்பிக்கை பெறும் வகையில் வெளிப்படையான நிர்வாகத்தை மேம்படுத்துதல்.

பல்வேறு சேவை பணிகளுக்கும் கால அட்டவணைகள் மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் சேவைகளை நிறைவேற்ற ஆவன அனைத்தும் செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>தகவல் மையம் :</u>**

மக்கள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பொது சேவைக்கான குறிக்கோள்களை விரைந்து நடைமுறைப்படுத்த ஏதுவாக நகராட்சியில் தகவல்மையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. தகவல் மையத்தின் மூலம் நகராட்சிக்கு பல்வேறு சேவைகள் தொடர்பாக வருவோருக்கு உரிய வழிகாட்டுதல் செய்யப்படுவதோடு பிறப்பு, இறப்பு, சான்றுகள் வீட்டுவரி தொடர்புடைய சான்றுகள் கட்டிட அனுமதிக்கான உரிமங்கள் குடிநீர் இணைப்பிற்கான அனுமதி போன்றவை உரிய நேரத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. நகராட்சியின் மூலம் அனைத்து ரசீதுகளும் கணினி மூலம் நகராட்சி தகவல்மைய கட்டிடத்தில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் பொதுமக்களின் வசதிக்காக இரண்டாவது கணினி வரிவசூல் மையம் நகராட்சி பேருந்துநிலைய வளாகத்தில் உள்ள வார்டு அலுவலகத்தில் 21.7.2006 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்தகவல்மையம் தோற்றுவிக்கப்பட்டதன் மூலம் நகராட்சியின் பொது சேவையின் செயல்பாடு மேம்பட்டுள்ளது.

**கணிணிப்பிரிவு**

நகராட்சியின் செயல்பாடுகள் அனைத்தையும் கணினிமையாக்குவதன் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு கணிப்பொறிகள் வாங்கப்பட்டு கணிப்பொறிகள் இயக்கப்பட்டு வருகிறது. இந்நகராட்சியை பொறுத்தமட்டில் அன்றாட அலுவல்கள் அனைத்தும் தற்போது கணிப்பொறியிலேயே நகல் எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. commr.tiruvarur@tn.gov.in என்ற இ.மெயில் முகவரி மூலம் நகராட்சியின் தகவல் பரிமாற்றங்கள் நடைபெறுகின்றன. மேலும் திருவாரூர் நகராட்சி பற்றிய தகவல்களை http://municipality.tn.gov.in/tiruvarur என்ற இணையதளத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம் திருவாரூர் நகராட்சியில் நடைபெறும் ஒப்பந்தப்புள்ளிகள் E-tendering மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்று செயல்பட்டு வருகிறது. மேலும், விபரங்கள் http://tntenders.gov.in/ என்ற முகவரியின் மூலம் தெரிந்துக்கொள்ளலாம். ((http://municipality.tn.gov.in/tenders) தெரிந்துகொள்ளலாம். கணிணிப்பிரிவிற்கென்று உதவி திட்ட அமைப்பாளர் ஒருவரும், புள்ளி விபர குறிப்பாளர் ஒருவரும் பணிபுரிந்து வருகின்றனர்.

**பேருந்துநிலைய அபிவிருத்தி:**

தற்போதுள்ள பேருந்துநிலையம் வளர்ந்துவரும் தேவைக்கேற்ப அமைத்திடவில்லை என்பதால் நவீன வசதிகளுடன் கூடிய புதிய பேருந்துநிலையம் ஒன்றை அமைக்க பொதுநிதியிலிருந்து ரூ.1.90 கோடி செலவினத்தில் 11.08 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு புதிய பேருந்துநிலையம் அம்க்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**நகராட்சியின் சிறப்பியல்புகள்:**

1) நிதிநிலை திருப்திகரம்
2) மனிதக்கழிவுகளை மனிதன் அகற்றுவதுமுற்றிலும் இல்லை
3) மாட்டுவண்டிகள் குப்பை அகற்ற பயன்படுத்தப்படுவதில்லை
4) அனைத்து பணியாளர்களுக்கும், ஓய்வூதியதாரர்களுக்கும் சம்பளம்/ஓய்வூதியம் மற்ற பயன்கள் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்பட்டுவருகிறது.
5) அனைத்து அலுவலர்கள், பணியாளர்களுக்கு வங்கிமூலம் மாத ஊதியம் வழங்குதல்.
6) ஓய்வுபெறும்பணியாளர்களுக்கும் அலுவலர்களுக்கும் ஓய்வுபெறும் நாளன்றே காசோலை மூலம் அனைத்து பணபயன்களும் பட்டுவாடா செய்யப்படுகிறது.
7) நூலகவரி அந்தந்த மாதங்களில் செலுத்தப்படுகிறது.
8) கடன்களுக்கான தவணைத்தொகை முறையே செலுத்தப்பட்டு வருகிறது.
9) பணியாளர்களுக்கு சிக்கனக்கடன் வசதிச்சங்கம் துவங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது.
10) கணிணிப்பயன்பாட்டில் சிறப்பிடம் கணினி மூலம் வரி - வரியிலா இனங்கள் ரசீதுவழங்குதல்
11) துப்புரவு பணியாளர்களுக்கு தனியாரைப்போன்று சீருடைகள் வழங்கப்பட்டுள்ளது.
12) தினமும் காலை 2 மணிநேரம் மாலை 1 மணி நேரம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது.

**நிர்வாகம் :**

அறிக்கையாண்டில் நகராட்சியின் பல்வேறு பணிகளையும் சீரோடும் சிறப்போடும் செயல்படுத்தி அதன் பயன்கள் பொதுமக்களுக்குச் சென்றடைய ஒத்துழைப்பு நல்கி வரும் நகர்மன்ற தலைவர், நகரமன்றத்துணைத்தலைவர், மற்றும் உறுப்பினர்களுக்கும் நகராட்சியின் பணிகளை நிறைவேற்றிட அயராது பாடுபடும் பொறியாளர், துப்புரவு அலுவலர், வருவாய் ஆய்வர்கள், வருவாய் உதவியாளர்கள், நகரமைப்பு ஆய்வாளர்கள் மற்றும் மேலாளர் உட்பட அனைத்து பிரிவு உள் மற்றும் புற பணியாளர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

க.சரவணன்
நகராட்சி ஆணையர்



KB/2009-10

# திருவாரூர் நகராட்சி

## நிர்வாக அறிக்கை

## 2009-2010 ஆம் ஆண்டு

## (1.4.2009 முதல் 31.3.2010 முடிய )